ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

ௐ

॥ श्री शङ्करगुरुभ्यो नमः । श्री शारदांबायै नमः ॥

## ஸ்ரீ சங்கரவித்யாலயம்,

மண்டகுளத்தூர்.

இப்பவும் ஸ்ரீவ்யாஸபூஜார்த்தமாக பூசைமலைக்குப்பத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஆக்ஞையையும் ஆதரவையும் பரிபூர்ணஅநுக்ரஹத்தையும் முன்னிட்டு நாளது பிரமோதூத வருஷ ஸிம்மமாஸம் 12௳ சுக்லபஞ்சமி குருவாஸரம் ஸ்வாதிநக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் துலாலக்னத்தில் மண்டகுளத்தூர் ஸ்ரீசங்கரநிலயத்தில் மண்டகுளத்தூர், போளூர், பெலாசூர், அல்லியாளமங்கலம் முதலிய அக்ரஹாரமஹாஜனங்கள் முன்பாகவும் ஆதரவிலும் எம். மார்க்கபந்து தீக்ஷிதர் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் ப்ரம்மஸ்ரீ கங்காபுரம் நாராயணசாஸ்திரிகளாலும் மண்டகுளத்தூர் ப்ரம்மஸ்ரீ மீமாம்ஸா சிரோமணி அ. ராமனுஜசாஸ்திரிகளாலும்

"வேதம், காவ்யம், சாஸ்த்ரம்"

இவைகளுக்குரிய வித்யாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அ. ராமனுஜசாஸ்திரிகளால் வித்யார்த்திகளுக்கு மேற்கூறிய வேதாதிபாடங்கள் நடத்தப்பட்டுவருகிறது. ப்ரக்ருதம் 12வித்யார்த்திகள் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வித்யாலயத்தின் அபிவிருத்தியின் பொருட்டு ஆஸ்திகமஹாஜனங்கள் அனைவரும் தங்களாலான உதவிபுரிந்து அநுக்ரஹிக்கவேணுமாய்ப் பிரார்த்தித்துக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

வ. ஸா. ஸ்ரீநிவாஸன், (வாத்யார்)

வித்யார்த்தி,

ஸ்ரீசங்கரவித்யாலயம்,

மண்டகுளத்தூர். (N.A.Dt.)

---

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஹு புரட்டாசி-மீ உ௨

## சிராத்தம்.

(390-வது பக்கத்தொடர்ச்சி.)

वेदाः प्रमाणं स्मृतयः प्रमाणं धर्मार्थयुक्तं वचनं प्रमाणम् ।
यस्य प्रमाणं न भवेत्प्रमाणं कस्तस्य कुर्याद्वचनं प्रमाणम् ॥

என்பதால் ஸ்மிருதீதிஹாஸாதிகள் பிரமாணமில்லையென்றால் பிரமாணமென்பதற்குப் பிரமாணம் நிரூபிக்கவேண்டும். அந்தப் பிரமாணங்களிலுமப்பிராமாண்யத்தை யடையும்பக்ஷத்தில் புராணப் பிராமாண்யத்திற்குப் பிரமாணமில்லையென்ற வசனம்மட்டிலும் பிரமாணமா என்ற பிரச்னம் ஏற்படுமென்று விசேஷார்த்தமும் கூறப்பட்டது.

அன்றியும் உலகஇயற்கைக்கு விரோதமாக ஸ்மிருதிகளிருக்கின்றனவென்ற நண்பரின் அபிப்பிராயமும் ஸரியல்ல. வேதஸ்மிருதீதிஹாஸபுராணாதிப் பிரஸித்தமாயுள்ள வர்ணாச்ரமத்தைப் பின்பற்றி அநுஷ்டித்துவருவதுதான் இயற்கைக்கு அநுகூலம். அதையநுஷ்டிக்காமல்விடுவதுதான் ஸ்வபாவத்திற்குப்பிரதிகூலம் இதற்கு விரோதமாக மாறிக் கூறுவதும் பிரதிகூலமேயாகும். இயற்கையாயமைந்துள்ள தோஷகாரியத்தை விலக்கி நற்காரியத்தில் பிரவர்த்திக்கும்படி செய்வதுதான் சாஸ்திரமாகும். சாஸ்திரமூலமாகத்தான் நல்லது கெட்டதுகளை அறிந்துகொள்ளமுடியுமேயொழிய தமது குதர்க்கத்தால் அவற்றை அறிந்துகொள்வது ஒருபோதும் முடியாது. இவ்வண்ணமிருக்க சாஸ்திரமெப்படி இயற்கைக்கு விருத்தமாகாது. ஆகவே இயற்கைக்கு சாஸ்திரம் விரோதமாகவிருக்கின்றதென்பது நமக்கிஷ்டமேயொழிய அநிஷ்டமல்ல. நம்முடைய இயற்கையை நாம் சாஸ்திரவாயிலாக மாற்றிக்கொள்ளவேண்டுமேயொழிய இயற்கைக்கு விரோதமாயிருப்

பதால் சாஸ்திரங்களை இயற்கைக்கு அனுகூலமாக மாற்றிக்கொள்ளக் கூடாதென்று ஸ்ரீ பகவத்கீதையிலும், மற்றுமுள்ள ஸ்மிருதிகளாலும், புலப்படுகின்றது.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्मकर्तुमिहार्हसि ॥
श्रुतिस्मृत्युदितं धर्ममनुतिष्ठन्हि मानवः ।
इह किर्तिमवाप्नोति प्रेत्य चानुत्तमं सुखम् ॥
" सर्ववर्णाणां स्वधर्मानुष्टाने परमपरिमितं सुखं "
" धर्मेण पापमपनुदाति " என்பதாதி

புண்யபாபங்களால் தான் சுகதுக்கங்கள் ஏற்படவேண்டுமேயொழிய வேறு ஸாதனங்களாலல்ல. நாம் சுகமாக இவ்வுலகில் வாழ்வதற்குத் தர்மந்தான் காரணம். அத்தகைய தர்மகாரியங்களெல்லாம் எப்படி இயற்கைக்குக் விரோதமாக இருக்கமுடியும். இவ்விஷயத்தை பலவிதமாயும் நிரூபிக்கமுடியும். அதனைஸத்குருமூலமாகத் தானுணர்ந்து கொள்ளவேண்டும். இப்படியெல்லாம்இயற்கைக்கு விரோதமென்றும், வேதவிருத்தமாயிருக்கின்றதென்றும் பிராமணர்களால் புத்திக்குத் தோன்றியவாறு எழுதப்பட்டது என்றும் வருணாசிரம தர்மமார்க்கத்தை நிந்தித்துக்கொண்டு தம் புத்திப்பிரமாணத்தால் ஸித்திக்கப்பட்ட காரியங்களையெல்லாம் செய்ய ஆரம்பித்தது முதல்தான் நமக்கு அனேக அனர்த்தபரம்பரை ஆவிர்பவித்தன என்பது திண்ணம்.

रागद्वेषाग्निदग्धानामज्ञानाविषपायिनाम् ।
चिकित्सा धर्मशास्त्राणि व्याधीनामिवभेषजम् ।
धर्मएव हतोहन्ति धर्मो रक्षति रक्षितः ।

என்றல்லவா ஸ்மிருதிகள் உத்கோஷிக்கின்றன. அபௌருஷேயமென்றும், நித்யருக்தமென்றும், புகழடைந்து விளங்கும் வேதத்தை தபோவிசேஷத்தாலும் ஈசுவரானுக்ரஹத்தாலும், வைதிக ஸநாதன தர்மங்களுக்குமூலப்ரமாணமாக அறிந்துகொண்டு அதன் மூலமாக வெளியாகும் அர்த்த விசேஷத்தையல்லவா? நமது மகரிஷிகள் ஸ்மிருதிக்கிரந்தங்களில் நிரூபித்திருக்கின்றார்கள். ரிஷிகளுக்குள் காலவித்தியாசத்தைக் கற்பிப்பதும் பிசகேயாகும்!

सहोवाच वेदव्यासः पाराशर्यः। यद्वै किञ्च न मनुरवदत्तद्भेपजम् ॥

यः कश्चित्कस्यचिद्धर्मो मनुना संप्रकीर्तितः ।
स सर्वोऽभिहितो वेदे सर्वज्ञानमयो हि सः ।
द्वापरेद्वापरे विष्णुर्व्यासरूपी महामुने ।

என்ற சுருதிஸ்மிருதிகளால் போற்றப்படும் ஸர்வக்ஞர்களாகிய மகரிஷிகளை நம்மைப்போல் நினைத்துக்கொண்டு எப்படி இகழ்ந்து பேசுவது. ஸ்மிருதிக்கிரந்தங்களுக்குள்ளும், புராணங்களுக்குள்ளும் பிராசீனம் நவீனமென்ற காலவித்தியாசத்தைக் கற்பனை செய்வதற்கு யாதொரு யுக்தியும் கிடையாது. ஸர்வவேதங்களிலும் ஸர்வகாலங்களிலும், ஸர்வஜனங்களிடத்திலும், அசைவற்ற பர்வதம்போல் நித்தியமாகவும், ஒரே விதமாகவும் இருக்கும் தர்மாதர்மமென்னும் அர்த்தத்தையல்லவா ஸ்மிருதி புராணாதிகள் பிரதிபாதிக்கின்றன. வேதார்த்தத்தை நன்குணராமல் விபரீதஞானமுள்ள மூடர்கள் துர்வாஸனானுசாரமாக தம்மிஷ்டப்படிக்கெல்லாம் உண்மையில் தர்மமாயிருக்கும் காரியங்களை அதர்மமென்று விலக்கியும், உண்மையில் நிஷித்தமாகிய காரியங்களை தர்மகாரியமென்று சிரத்தையுடன் அனுஷ்டித்துக்கொண்டும் வாலாமன்றோ. ஆகவே நமது ஆசாரமெல்லாம் தர்மாதர்ம ரூபமென்று எப்படிச் சொல்லமுடியும். ஸ்மிருதி புராணாதிகளை இயற்றிய தயாநிதிகளாகிய மகரிஷிகளுக்கும் புத்திதோஷம்இருப்பதாக, ஹீனபுத்தியுள்ள நாம் புத்திபலத்தை மாத்திரம் அவலம்பித்துக்கொண்டுகல்பித்து விடுவது ஸாஹஸகாரியமன்றோ? இதுவரையில்,

“ अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुतः ”

என்ற வசனப்படி புராணங்களை வியாஸபகவான் எழுதினதாக அங்கீகரித்துப் பேசினோம். இனி புராணங்களை ஸர்வேசுவரனே வேதங்களைப்போல் வெளியிட்டாரென்ற ஸித்தாந்த ரகசியத்தை அறிவிக்கத்துடங்குவாம்.

‘ यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ’ ‘ अस्य महतो भूतस्य ’ என்று ஆரம்பித்து ‘ इतिहासः पुराणं ’

तस्मै वेदान्पुराणानि दत्तवानग्रजन्मने ।
अष्टादशानमेतासां विद्यानां भिन्नवर्त्मनाम् ।
आदिकर्ता कविस्साक्षाच्छूलपाणिरिति श्रुतिः ॥

भूयस्स भगवान्ध्यात्वा चिरं शूलवरायुधः ।
असृजत्सर्वशास्त्राणि महादेवो महेश्वरः ॥
इत्येताश्शंकरप्रोक्ताः विद्याश्शब्दार्थसंयुताः ।

என்று சுருதிஸ்மிருதிபுராணங்களால் பரமேசுவரனே, புராணாதிகளை வெளியிட்டாரென்பது தெரிகின்றது.

ஆகவே வேதத்தை ஹிரண்யகர்பர் சிருஷ்டியின்நதியில் ஈசுவரனிடமிருந்து எவ்விதம் முதலில் அடைந்தாரோ அதே மாதிரி புராணஸ்மிருதிகளையும் அவ்வீசுவரனிடமிருந்தே அவரடைந்தார். அவரிடமிருந்து ஸனகாதி மகரிஷிகளடைந்தார்கள். இங்கு இது தத்வமாகும். மஹாபிரளயம் அவாந்தரப்பிரளயம் எனப் பிரளயமிருவிதம் மகாப்பிரளயமாவது. பிரகிருதியில் ஸகலமும் ஒடுங்கி அடங்கி லயித்துப்போய் ஈசுவரன் மாத்திரம் மிஞ்சியுள்ளதாகிய பிரளயம். இரண்டாவது அவாந்தரப்ரளயமானது நைமித்திகப் பிரளயமென்றும் யுகப்பிரளயமென்றும் இருவகைப்படும். பிரும்ம தேவனுக்கு ஒரு பகல் முடிந்ததும் எல்லாம் ஜலமாத்திரமாய் மிஞ்சிப்போகும் பிரளயம் நைமித்திகமாகும். கிருதம், திரேதை, த்வாபரம், கலி என்று நான்கு யுகங்களினிறுதியில் ஏற்படும் வஸ்து விநாசமே யுகப்ரளயமாகும். மஹாப்ரளயத்திலும் அவாந்தர பிரளயத்திலும் வேதத்தையும்புராணாதி வித்யைகளையும் ஈசுவரன் தன்னிடம் அடக்கம்செய்துகொண்டு மஹாஸிருஷ்டியின் ஆரம்பத்தில் தம்மால் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட ஹிரண்யகர்பருக்குக் கொடுக்கின்றார். அவரோ பிராசீனபுண்யகர்மவசமாக வியாஸர், வஸிஷ்டர், விசுவாமித்திரர், முதலிய மகரிஷிபதவியை அடைந்த மகரிஷிகளுக்கும் அந்த மகரிஷிகளோ மற்றுமுள்ளவர்களுக்காக வேதசாஸ்திரங்களுக்குப் பிரசாரம் ஏற்படுகின்றது. இவ்வாறு சர்வேசுவரனாலுரைக்கப்பட்டதாக விதித்திபெற்று விளங்கும் புராணாதிகளுக்குஅப்பிராமாண்யம்எப்படி? நம் மதத்தில் மகரிஷிகளை ஆதிகாரிகரென்றும், பிராஸங்கிகரென்றும் இருவிதமாகப் பிரித்துக் கூறப்படுகின்றது. பூர்வகல்பத்தில் செய்த தபோவிசேஷத்தாலிக்கல்பாதியில் ஸ்வர்க்கம் முதலிய உலகங்களில் அதிகாரப்பதவியிலமர்ந்துள்ளவரேஆதிகாரிகர்களாவார்கள். உலகம் நடைபெற்றுவரும் கல்பமத்தியில் புண்யகர்மவிசேஷத்தால் ஸ்வர்காதி உலகங்களில் தேவர்களாகவும், ரிஷிகளாக

வும், விளங்குபவர் பிராஸங்கிகராவர். வியாஸர், வசிஷ்டர், விசுவாமித்திரர், யாக்யவல்கியர், பராசரர், அத்ரி ஹாரீதர், காத்யாயனர், பிருஹஸ்பதி, கௌதமர், போதாயனர், நாரதர், அங்கிரஸ், முதலிய மகரிஷிகளெல்லாம், அத்தகைய அதிகாரப்பதவியில் அமர்ந்தவர்களல்லவா? அவர்களுக்கு அந்த அதிகாரப்பதவியை அளித்தது அவ்வீசுவரனேயாகும். அவர்களுக்கு வேதார்த்தத்தை ஸங்கிரஹமாயும், விரிவாயும், வெளியிடுவதுதான் வேலையாகும். இவர்கள் வேதங்களையும், தபோமகிமையால் கண்டுபிடிப்பார்கள். இப்படி வேதங்களைக்கண்டுபிடிக்கும் காரணத்தாலேயே இவர்களை மந்திரதரிசிகளென்றும், பிரமணக்காரர்கள் என்றும், பதகாரரென்றும், ஸம்ஹிதாகாரரென்றும், சொல்வது, கல்பாதியில் சிதறுண்டு கிடக்குமிவ்வேதத்தையும், அதனர்த்தத்தையும் பரிபாலித்து வெளியிடுவது இவர்களின் வேலை.

அப்படி வெளிப்பட்ட கிரந்தங்கள் தான்ஸ்மிருதிஇதிஹாஸபுராணாதிகளாகும். புராணம் கல்பாதியிலனேககோடி கிரந்தசங்கியையுள்ளதாயிருந்ததாகவும், பிறகு அவற்றை பிரும்மதேவர் ஒருகோடிகிரந்தமாத்திரமாக ஸங்கிரஹித்ததாயும், அதன் பிறகு வியாஸாசிரியர் துவாபரயுகத்தினிறுதியில் 4-லக்ஷம் கிரந்தமாத்திரமாகவும், 18-விதமாகவும், ஸங்கிரஹித்ததாகவும், மாத்ஸ்யம் பாத்மம் முதலிய புராணவசனத்தால் புலப்படுகின்றது.

மாத்யஸ்ய புராணத்தில்,

पुराणं सर्वशास्त्राणां प्रथमं ब्रह्मणा स्मृतं । என்று ஆரம்பித்து,

कालेनाग्रहणं दृष्ट्वा पुराणस्य ततो नृप ।

व्यासरूपमहं कृत्वा संहरामि युगेयुगे ॥

चतुर्लक्षप्रमाणेन द्वापरेद्वापरे सदा ।

तथाष्टादशधा कृत्वा भूलोकेस्मिन्प்रकाशये என்று முடித்திருப்பதாலும்,

कल्पेकल्पे महाभागैः ऋषिभिस्तत्वदर्शिभिः ।

ऋषिपुत्रैश्च तैस्तैर्हि विष्णुना च विकल्पिताः ।

என்று மஹாபாரத வசனத்தாலும், புராணாதிகளை ரிஷிகள் பிரவசனம் மட்டிலும் செய்ததாகப் புலப்படுகின்றதேயொழிய செய்து விட்டதாகப் புலப்படவில்லை. இப்படிப்பட்ட புராணங்க

ளுக்கு பரஸ்பரம் விரோதமுமில்லை. அந்தந்த யுகங்களின் விருத்தாந்தத்தை அறிவிக்கும் அவைகளுக்குளெப்படி விரோதமேற்படும்?

एकार्थानिपुराणानि என்றல்லவா மஹாபாரதவசனம். ஆகையால் ஈசுவரனுலியற்றப்பட்டதாயும் பிறகு மஹாபுருஷர்களால் வெளியில் பிரகாசப்படுத்தப்பட்டதாயும் உள்ள புராணுதிகள் மந்தமத்தியமாதிகாரிகளுக்காகவும் அவசியமன்றே? இவ்வண்ணமிருக்க புராணுதிகளை மகரிஷிகளோ மற்றுமுள்ள சுயநலங்கருதிய பிராம்மணர்களோ இயற்றினர்களென்று கூறுவது விசாரணையில்லாமலேயேயாம். இதனுலேயே புராணுதிகளை கலியுகாதியில் வியாஸர் இயற்றிவிட்டாரென்பதற்கு சரித்திர ஆராய்ச்சி செய்திருப்பதும் ஸரியல்ல என்று ஸித்தம்.

பத்மபுராணம் பிரும்மாண்டபுராணமிவை 300 வருஷங்களுக்குமுன்பு எழுதப்பட்டதாக சர்மா எழுதுவதுமஸங்கதம். அதில் புகையிலையை உபயோகிக்கக்கூடாதென்று நிருபணம் செய்திருப்பதாலல்லவா அவ்வித வழக்கம் ஏற்பட்டபிறகுதான் அவை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று சர்மா ஸ்தாபிக்கிருர்.

धूमपानरतंविप्रम् என்று ஒரு வசனத்தால் எப்படி அவருடைய காலநிர்ணயமுசிதமாகும். புகையிலையை உபயோகத்தில் வைத்துக்கொள்ளும் வழக்கம் விருத்தியானபிறகுதான் இப்புராணமெழுதப்பட்டதென்பதற்கு இவ்வசனமொன்றுபோதுமா? இவ்வசனத்தைமட்டிலும் பிந்தியாராவது சேர்த்திருக்கிறதாக ஒப்புக்கொள்ளக்கூடாதோ? அப்படி சேர்க்கப்பட்டபோதிலும்

युक्तियुक्तंवचोग्राह्यम् என்ற நியாயப்படி வேதவிருத்தமில்லாத இவ்வசனத்தையும் என் பிரமாணமாக ஒப்புக்கொள்ளக்கூடாது? புராணம் பிரமாணமென்பதற்கு காலவாம்பு தோஷமில்லை என்று நிரூபித்தாய்விட்டதல்லவா, வேதார்த்தத்தை வெளியிடும் புராணங்கள் எக்காலத்திலுத்பன்னமானுல்தானென்ன? ஏனென்றுல் நாமொரு கிரந்தத்தையியற்றி அவற்றில் ஜ்யோதிஷ்டோமம், அக்னிஹோத்திரம் முதலியவை அனுஷ்டிப்பது தர்மமென்று நிருபித்திருந்தால் அவ்வர்த்தவிசேஷத்தை அறிவித்து கிரந்தம் நூதனமென்றே ஸித்தித்தபோதிலும் அக்கிரந்தங்களினின்றும் வெளியாகுமர்த்தம் (ஜ்யோதிஷ்டோமம் முதலியவை) நூதனமாக ஸித்தித்துவிடுமா? மகரிஷிகளின் முகத்திலிருந்து நூதன

மாக ஒரு அர்த்தமும் வெளிவாராததல்லவா? புராதனமாயும் புனித மாயும் உள்ள வேதார்த்தந்தான் வெளியாகும். அதாவது சித்தத்திலிருக்கும் அசுபவாஸனையாகிய அசுத்தத்தை நீக்கிக்கொள்வதற்காக வேதங்களில் நித்யகர்மம் யோகம் பக்திஸந்தியாவந்தனம் முதலிய அனேக உபாயங்களை விதித்திருப்பதுபோல் சிலவற்றை யனுஷ்டிக்கலாகாதென்று நிஷேதிக்கப்பட்டுமிருக்கின்றது.

வேதங்களில் விஹிதம் நிஷித்தம் அவிஹிதாநிஷித்தம் உபேக்ஷிதம் என்று நான்குவிதமாக காரியங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விஹிதமென்பது ஸந்தியாவந்தனம் முதலிய ச்ரௌதஸ்மார்த்தாதி கர்மாக்களாகும். நிஷித்தமாவது பிறன் மனைவியுடன் சேராதே குடி குடிக்காதே என்பதாதி விலக்கப்பட்ட காரியமாகும். அவிஹிதாநிஷித்தமாவது பொடிபோடுதல் காப்பிசாப்பிடுதல் முதலிய காரியமாகும். மற்றவை உதாஸீனமாகும். இதனை விரிவாக கிரந்தங்களிலுணர்க. இப்படியிருக்க புகையிலையை உபயோகிக்கலாகாதென்பதும் நிஷித்தத்துக்குள்ளோ அல்லது அவிஹிதாநிஷித்தத்துக்குள்ளோ அந்தர்பாவம் செய்யவேண்டும். ஆகவே புகையிலையை உபயோகத்தில் கையாள ஆரம்பித்தபிறகுதான் இவ்வசனமும் இப்புராணமும் அதை நிஷேதிக்க ஆரம்பித்ததென்று குதர்க்கம் புரியும் சர்மாவின் நண்பர் புகையிலைவிஷயத்தில் இவ்விதம் ஊஹம் செய்வதுபோல் கஞ்சா தின்னல், கட்குடித்தல் மாம்ஸமுண்ணுதல் பிறர் மனைவியுடன் புணர்தல்முதலிய எல்லா நிஷித்த காரியங்களிலுமே இவ்விதமேன் ஊஹம் செய்யக்கூடாது? அதாவது கட்குடித்தல்முதலிய நிஷித்தகாரியங்களையெல்லாம் முதலில் யாவருமனுஷ்டித்துக்கொண்டுதானிருந்தார்கள். பிறகு காலக்கிரமமாக அக்காரியங்களில் சில தோஷங்களிருப்பதாக தம்மனுபவத்தைக்கொண்டு அறிந்தவுடன், அதுமுதல் அக்காரியத்தை அனுஷ்டிக்காமல் விட்டுவிட்டதுமன்றி பிறரையும் அனுஷ்டிக்கவொட்டாமல் தடுப்பதற்காக சாஸ்திரங்களிலும், நிஷித்தமெனக் கூற ஆரம்பித்து விட்டார்களென்றும் இவ்வாறாக நிஷேதகாரியங்களிலும் தங்களுடைய ஊஹம் பிரவேசிக்கலாமன்றோ? அத்தகைய நிஷித்த காரியங்களையெல்லாம் கையாளுவதற்கு ஆரம்பித்த பிறகுதான் நிஷேதசாஸ்திரங்களை அறிவிக்கும் புராணாதிகள் செய்யப்பட்டனவென்றும் கற்பிக்கலாமன்றோ? இவ்விதம் கூறுவது இஷ்டந்தானென்றால் தமது புத்திக்குத் தோன்றும்

காரியங்களையெல்லாம் முதலில் அனுஷ்டிக்க ஆரம்பிப்பதும், பிறகு அக்காரியங்களில் ஏதாவது கெடுதல் ஸம்பவிக்கும் பக்ஷத்தில் அனுஷ்டிக்கக் கூடாதென்று விலக்குவதும் விவேகமற்ற சிற்றறிவுள்ள பாமரர்களுடைய ஸ்வபாவமேயொழிய ஸர்வேசுவரனுக்குச் சமமான மகிமைவாய்ந்த ஸர்வக்ஞர்களாகிய, மனு, யாக்யவல்கியர், வியாஸர், முதலிய நம் முன்னோர்களுக்கு அவ்வித ஸ்வபாவமிருந்ததாக சங்கிப்பதற்கு இடமில்லை, நியாயமுமில்லை. விளையாட்டிற்காகவாவது அதர்மத்தை தர்மமாகவும், தர்மத்தை அதர்மமாகவும், நமது முன்னோர்கள் அனுஷ்டிக்கவேமாட்டார்கள். விஹிதம் நிஷித்தமென்ற வியவஸ்தை நாம் தர்க்கமூலமாகவும், பிரத்யக்ஷ உலகானுபவ மூலமாகவும் ஏற்படமுடியாது. அப்படி ஏற்படுமேயானால் சாஸ்திரங்களனைத்துமே நிஷ்பலமாயல்லவா முடிந்துவிடும். இதுவரையில் இத்தகைய தர்க்க நிபுணர்கள் அவதரிக்காததால் தான் வைதிகர்களுக்கு சாஸ்திரங்களை பிரமாணமாக நம்பும்படி நேரிட்டது. இப்போது இவர்கள் அவதரித்திருப்பதால் சாஸ்திரமவசியமில்லை என்றல்லவா ஸித்திக்கும். ஆதலால் உலகானுபவத்தால் விஹித நிஷித்த வியவஸ்தை ஏற்படமுடியாது என்பது நிச்சயம்.

நமது முன்னோர்கள் அவரவர்கள் காலத்து ஆசாரானுஷ்டான முறைகளை வெளியிடுவதற்காக புராணாதிகளை எழுதவில்லை. அவ்வித ஆசாரமெல்லாம் தர்மாதர்மரூபமாக ஆகாதல்லவா ? ஆதலால் புகையிலையினுடைய பிரசாரத்திற்குப் பிறகுதான் பத்மபுராணத்தை யாரோவரைந்ததாகக் கூறுவது எப்படிப்பொருந்தும் ? இப்படி விஹிதகாரியங்களிலுங்கூடக் கூறிவிடலாமே, ஸந்தியாவந்தனம் முதலிய விஹிதங்களையுங் கூட முதலில் அனுஷ்டித்து பிறகு அதில் குணமிருப்பதாகத் தெரிந்துகொண்டு அதன்பின் தான் விஹிதங்களென்று புராணங்களில் வரைந்துவிட்டதாகவும் அதற்குப்பிறகுதான் அந்தந்தபுராணாதிகள் எழுதப்பட்டனவென்றும், ஏன்சொல்லக் கூடாது. காலபேதத்தாலும் அடிக்கடிமாறிக் கொண்டிருக்கும்ஆசாரத்தையாசாஸ்திரங்கள்கூறுகின்றன?வேதார்த்தத்தையல்லவா வெளியிடுகின்றன. ஆகையால் புராணாதிகளை ஜனசாரஸங்கிரஹரூபமாக நினைத்துக்கொண்டு மகரிஷிகளால் வரையப்பட்ட புராணாதி கிரந்தங்களுக்குக் காலவித்தியாசம் கற்பிப்பது மூடத்தனமேயாகும். அன்றியும் பிராமணர்கள், க்ஷத்

ரியர், வைசியர், வேதத்தை தவிர அன்யபுஸ்தகத்தை படிக்கலாகாதென்றும் यौनधीत्य என்ற மனுவசனத்தால், த்விஜர்கள் புராணாதிகளைப்படிக்கக்கூடாதென்றுபுலப்படுவதால் எப்படி அப்படிப் பட்டபுராணாதிகளை வியாஸர்எழுதியிருப்பாரென்று சர்மா எழுதுவதும் மிகவும் தவறேயாகும்.

த்விஜர்கள் வேதத்தையத்தியயனம் முதலில் செய்யவேண்டுமென்று கூறுவதற்காக வேறு புஸ்தகங்களை வாசிக்கலாகாதென்று மனு கூறியிருக்கிறாரேயொழிய வேதாத்யயனம் பண்ணின பிறகும் அவற்றைப் படிக்கலாதென்று அதனர்த்தமல்ல. வேதாத்யயனம் அவசியமென்பதற்காக "புராணங்களைப் படிக்கலாகாது" என்று நிஷேதித்திருப்பதாகஎன்ஒப்புக்கொள்ளக்கூடாது. ஒன்றை விதிப்பதற்காக, மற்றொன்றை நிந்திப்பது உலகத்திலும் நாம் கண்டறிந்த விஷயமே. அவ்விடத்தில் உண்மையில் நிந்தை செய்வதில் தாத்பர்யமில்லையல்லவா? அதுபோல இவ்வசனத்திற்கும் புராணாதிகளை நிந்திப்பதில் தாத்பர்யமில்லையாதலால் இதனாலும் புராணாதிகள் அப்பிரமாணமென்று சித்திக்கமாட்டாது.

தவிர த்விஜர்கள் வேதத்தை அர்த்தத்துடன் தான் அத்யனம் செய்யவேண்டும். அர்த்த விசாரம் செய்யாமல் வேதசப்தத்தை மட்டிலும் நெட்டுருப்போட்டு விட்டதால் யாதொரு பயனையும் த்விஜர்கள் அடையமுடியாது. இவ்விஷயம்,

"ब्राह्मणेन निष्कारणो वेदोऽध्येयो ज्ञेयश्च"

"स्थाणुरयं भारहरः किलाभूदधीत्यवेदान्न विजानाति योऽर्थम्"

என்றசுருதிஸ்மிருதிகளால்நன்குபுலப்படுகின்றதுவேதார்த்தத்தை அறிந்துகொள்வதற்காக வேதாங்கங்களையும் புராணாதிகளையுமவசியம்படித்தே தீரவேண்டும். இன்றேல்வேதார்த்தக்ஞானமேற்படநியாயமில்லை. ஆகவே, अन्यत्र என்ற பதத்திற்கு "புராணாதிகள் விஷயத்தில்" என்று அர்த்தங்கூறுவதற்கு அவகாசமில்லை. ஆனால் அப்பதத்திற்கு அத்யயனம் செய்யாமல் அர்த்தசாஸ்திரங்களையும் ஆங்கிலம், தமிழ் முதலிய பாஷாகிரந்தங்களையும் வாசிக்கலாகாது என்று அர்த்தம். ஆகவே வேதாத்யயனம் பண்ணுவதற்கு முந்தியே ஸ்மிருதி புராணம், வேதாங்கங்களிவற்றை வாசிப்பதைஇவ் வசனம்தடுப்பதில்லை, ஆதலால்இவ்வசனத்தைக்கொண்டுபுராணங்

களைப்படிக்கலாகாதென்றுஸ்தாபிக்கமுடியாது. अमम् என்பதால் அன்யபுஸ்தகங்களை படிப்பதில் அதிகயத்னம் எடுத்துக்கொள்வது தான்தோஷமென்றும் வேதாத்யயனம் செய்யும்போதும் வேறு ஸ்மிருதி முதலியவற்றை அப்பிரதானமாக வைத்துக்கொண்டுவாசிப்பதில் தோஷமில்லையென்றும் வெளியாகின்றன. இவ்விஷயத்தை மனுவே வேறிடத்தில் அறிவிக்கின்றார். அதாவது.

“ वेदः कृत्स्नोऽधिगन्तव्यस्सरहस्यो द्विजन्मना ”
इतिहासपुराणज्ञः पदवाक्यप्रमाणवित् ।
अङ्गोपकारवेदीच वेदार्थं ज्ञातुमर्हति ॥
“ योऽनधीत्यान्यां विद्यामधीयेतान्यत्रवेदाङ्गस्मृतिभ्यः ”

யாக்வல்க்யரும்

वाको वाक्यं पुराणं च नारशंसीश्चगाथिकाः ।
इतिहासांस्तथाविद्याः शक्त्याधीयीत योन्वहम् ॥

என்று புராணங்களை பிரும்மயக்ஞ காலத்தில் படிக்கவேண்டும் என்ற அபிப்பிராயப்படுகின்றார்.

तपसा ब्रह्मचर्येण न्यस्य वेदं सनातनम् ।
पराशरात्मनो विद्वान्महर्षिस्संशितव्रतः ।
इतिहासमिमं चक्रे पुण्यं सत्यवतीसुतः ।

என்ற வசனங்களால் மிகப்பரிசுத்தமென்றும்தினந்தோறும்பாராயணம் செய்துவரவேண்டிய தவசியமென்றும் போற்றப்படும்புராணாதிகளைப்படித்தவர் எப்படி குத்திரராவதாகத் தைரியமாகச் சொல்லமுடியும்.

(தொடரும்) வி. ஜகதீச்வரசாஸ்திரிகள்.

# ஓர் வேண்டுகோள்.

ஆர்யதர்ம பத்திராதிபர் அவர்களுக்கு எங்கள் ஹரிஹரபக்த சமூகத்தின்கீழ் முறைமைப்படி சமீபத்தில் கூடிய சபையின்கண் பலதர்மங்களைப்பற்றி விஷயாலோசனை செய்த சமயத்தில் தேவஸ்தானம் பண்டிட், K. S. S. சாஸ்திரிகளால் (சிராத்தத்தில் சிலாது அசங்கை) என்று ஆரியதர்மத்தில் வெளிவந்த வியாசத்தையும்

அதின் சாதக, பாதகங்களையும் மிகவிரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதின் சாரம் பின்வருமாறு—

சந்தேகம் நன்மைக்குக் காரணம் என்பது வேதத்தின் கருத்து. வடதேசத்து பண்டிட் சர்மா 'என்பவர் சிராத்தவிஷயமாயும் வேத. இதிஹாஸ, புராணங்கள் விஷயமாயும் பல சந்தேகங்கள் கொண்டு அதை நிவர்த்தி செய்துவைக்கவேண்டும் என்று ஆர்யதர்மம் மூலமாய் வெளிபிட்டிருக்கிறர். அவருக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களும் அதற்குள்ள நிவர்த்திமார்க்கமும், மிக சிக்கலானதுபற்றி ஆரியதர்மம் அதற்கு இடங்கொடுக்குமென்பது சந்தேகமாகவிருக்கிறது

காலத்தின்கொடுமையால் சகல ஸநாதனதர்மங்களும் நசித்தாலும் "சிராத்தம்'' ஒன்றுமட்டிலும் தலைகாட்டிவரும் நம்தேசன் தேயத்தில், தற்காலம் "சிராத்தத்திலும்'' வீண் துர்வாத சந்தேகங்கள் பிறந்துவிட்டது. இது கலிகாலத்தின் இலக்ஷணமாம். சிராத்தவிஷயமாக குதர்க்கம் செய்துவரும் சிலபுராணக்கதைகளை தாருமாறுகச் சொல்லி குதர்க்கம் செய்ய தற்காலம் ஆரியதர்மம் ஆதரவு அளித்திருக்கிறது.

பத்திராதிபர் அவர்கள் 27வது சஞ்சிகையில் வடதேசத்துப் பண்டிதரின் சந்தேகங்களுக்கு சமாதானம் கூறுவது அனுவசியமென அபிப்பிராயப்பட்டும் பிறகு வடதேசபண்டிதரின் அபிப்பிராயத்தை சமாதானம்செய்துவைக்கவேண்டியது அவசியம் என்பதுபற்றி யாரோ ஒருவர் சமாதானம் எழுதி வைத்திருப்பதாயும் அது யாவருக்கும் உபயோகப்படும்பொருட்டு கூடிய சீக்கிரம் வெளிவாலாமென்றும் சோதிடம் சொல்லி இருக்கிறர். இவ்விஷயத்தில் பத்திராதிபர் அவர்களுக்கு சந்தேகம் வருமானல் வடதேசத்துப்பண்டிதரின் வீண்சந்தேகங்களை என் அவசரப்பட்டு ஆரியதர்மம் மூலமாக வெளியிட்டார்களோ தெரியவில்லை.

சந்தேகம் வெளிவந்து நான்கு வாரங்களுக்கு அதிகமாக காலம் சென்றபிறகும் சமாதானம் இதுவரை வெளிவாராததால் சந்தேகம் திடப்படுமேயன்றிசமாதானம்உண்டாகவேமாட்டாது. சிறு சஞ்சிகையாகவரும் இவ்வார்யதர்மத்தில் அதிகமான தேசாந்தரீயபண்டிதரின் வீண் சந்தேகங்களை வெகு விஸ்தாரமாக வெளி

யிட்டதும், இது நாள்வரை அதற்குற்ற சமாதானம் வெளியிடாததும்நியாயமில்லைஎன்பதுமனப்பூர்வமாய்அபிப்பிராயப்படுகிறோம்.

சந்தேகத்தைச் சொல்லாமல் "ஸ்ரோத்ஸவிதி" விதிதங்களைமட்டிலும் வெளியிட்டிருந்தால் எவ்வளவோமேன்மையாகஇருக்கும்.

சிறு பத்திரிகையாக இருக்கும்போது அவசியமான தர்மம் ஸாரங்கள் மட்டிலுமே வெளிவரவேண்டும். ஏதாவது விஷயம் வெளியிடவந்தால் வெளியிடுவது அவசியமாவென்று நன்கு கவனித்து வெளியிடவேண்டியது பத்திராதிபரின் முறைமையேயாகும். வீண்சந்தேகங்கள் வெளியிடமுடியாதென்று மறுத்துச் சொல்ல பத்திராதிபருக்கு அதிகாரமுண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. அவசியத்தை செய்யாமலிருந்தால் அழகு குறைந்துவிடும். "நல்ல வைரத்துடன் இமிடேஷன் வைரத்தையும் வைத்து வியாபாரம் செய்ய எண்ணினால் நல்ல ரத்தினமும் சந்தேகத்தால் மகிமை குறைந்துபோகும்" என்பது ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயமாம். தர்மமார்க்கத்தை வெளியிடவந்த ஆரியதர்மத்தில் அனவசியமும் சாரமற்றதுமான பல வியாசங்கள் முன் பின் பின்னும் வெளிவந்துகொண்டிருப்பதைப் பார்த்தால் தக்கபடி தர்மமார்க்கமாய் வியாசம் எழுத பண்டிதர்கள் இல்லையோ அல்லது அவர்களுக்கு சாவகாசம் தான் இல்லையோவென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இம்மாதிரியான பல குறைகளையும் தீர்த்து வெகு ஸாரதரங்களான வியாசங்களுடன்ஆரியதர்மம்வெளிவரவேண்டியவிஷயத்தில் நமது "ஹரிஹரபக்தசமூகம்" உதவிபுரியவேண்டியது அவசியமாகும். வேதசாஸ்திர புராணாதிகளில் நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்களின் வியாசங்களும் ஆஸ்திக்யம் பெருகும்படியான வியாசங்களுமே இனிமேல் ஆரியதர்மத்தில் வெளியிடவேண்டுமென்று பத்திராதிபர் அவர்களை இந்த பிராம்மணசமூகம் வேண்டிக்கொள்வதுடன், சன்மார்க்க புத்தியைச் சகலருக்கும் அளிக்கவேண்டும் என்று ஸர்வேச்வரனை பிரார்த்தித்து உபன்னியாஸம் முடிக்கப்பட்டது.

சுபம்.

K. V. வீரமணி வாத்தியார்,
கொட்டாரக்கரை.

---

# ॥ वेदि प्रापक होमम् ॥

என்கிற

# ப்ரும்மசாரி ஆஹ்வான ஹோமம்.

தஞ்சாவூர் மேல ராஜவீதி குஜிலியாள் மடத்தில் "தஞ்சை ப்ரும்மசர்ய ஆச்ரம'த்தில் கலி 5032 ப்ரமோத-௵ ஆவணி-௴ 11௳ (27—8—30) புதன்கிழமை விநாயக சதுர்த்தி+ஸாமஉபாகர்ம கூடிய சுபதினத்தன்று—

தைத்தரீய உபநிஷத்தில் यश्छन्दसामृषभो विश्वरूपः । என்று ஆரம்பமுள்ள அநுவாகத்தில்உள்ள आमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । என்றது முதலான 11மந்திரங்களை 1008 ஆவர்த்தி ஆஜ்யஹோமம் செய்யப்பட்டது.

ஷை ஆச்ரமத்தின் மஹாசாரியான உமையாள்புரம் சிவசுப்ரமண்ய சாஸ்திரிகளால், விஷ்ணம்பேட்டை நடேச தீக்ஷிதரின் ஆசார்யத்வத்தில் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், தஞ்சை வெங்கடேசப் பெருமாள் மடவிளா ராமநாத சாஸ்திரிகள் இவர்களுடன்கூட பரமஹம்ஸ பரிவ்ராஜகாச்சார்யரான ஸ்ரீ சிவப்ரகாச ஆனந்தகிரிஸ்வாமிகள் ப்ரேரணையிலும் ஆதரவிலும் ஷை ப்ரும்மசர்ய ஆச்ரமத்துக்கு நாலாபக்கங்களிலிருந்தும் பல ப்ரும்மசாரிகள் வந்து சேரும்படி ப்ரணவாத்மகமான பரமேச்வரன் ப்ரஸாதம் ஏற்படும் பொருட்டு பரிஷ்காரமாய் நடத்தப்பட்டது.

ஷை ஹோமகாலத்தில்பிரும்மஸ்ரீ கள்ஸப்-ரிஜிஸ்டரார் கிருஷ்ணசுவாமிசாஸ்திரிகள், வக்கீல், லக்ஷ்மணசாஸ்திரிகள், ராமசேஷய்யர், ராதாகிருஷ்ணய்யர் முதலான வக்கீல்களும், மற்றும் பல கனதனவான்களும் விஜயம் செய்தார்கள்

மாலையில் ஷை மடத்தின் மாடியில் ஷை நடேசதீக்ஷிதரவர்களாலும், அனந்தராமதீக்ஷிதரவர்களாலும் ஷை ஹோமசம்பந்தமாகவும், வேதப்ரசாரம், வைதிககர்ம ஆசரணைமுதலானவிஷயங்களைப் பற்றியும் விரிவாய் உபன்யாஸங்கள் நடைபெற்றன.

உபன்யாஸங்கள் முடிந்ததும் யதாக்ரமம் ப்ரும்மசாரிகள் ஸாயம் ஸந்தியாவந்தன ஜபங்கள் செய்து, தொடர்ந்தே ஸமிதாதானம் தாங்களே மந்திரம் சொல்லிக்கொண்டு செய்வதை ஸப்யர்களனைவரும் வார்த்து குதூஹலம் அடைந்தார்கள்.

பின்னும் நடைபெறுவன—

1. ஆவணி 7 சனி மாலை ப்ராம்மண மஹாஸபை கூடிற்று திருக்கருகாவூர் மகா-ா-ா-ஸ்ரீ T.L ஸுப்பைய்யர் அவர்கள் தலைமையில் நடந்தது. பிரும்மஸ்ரீகள் வக்கில்கள் T. கோதண்டராமய்யங்காரை Presidend ஆகவும் G. T. லக்ஷ்மண சாஸ்திரிகளை Secretary & Treasurer ஆகவும் தீர்மானித்து நியமிக்கப்பட்டது. ஷை ஸுப்பைய்யர் அவர்களாலும் சூலமங்கலம் பிரும்மஸ்ரீ வைத்யநாத பாகவதராலும் ப்ராம்மண்யதர்மம் விருத்தியடையும் வழிகளைப்பற்றியும் ஆவச்யகத்தைப்பற்றியும் மிக உருக்கமாய் பெரும் கூட்டத்திடையில் உபன்யஸிக்கப்பட்டது.

2. ஆவணி 8 ஞாயிறு தஞ்சாவூரிலிருக்கும் வையச்சேரி, பாலஸுப்ரமண்ய தீக்ஷிதரவர்கள் ஸகாநாயக்கன்தெரு தட்டிமால் கட்டிடத்தில் 'நிரூடபசு பந்தம்' என்ற யாகம் நடத்தினர். நல்லிச்சேரி தீக்ஷிதர்கள் மணக்கால் முத்து ச்ரௌதிகள் முதலானவர் விஷ்ணம்பேட்டை நடேச தீக்ஷிதர், சேங்காலியுரம் அனந்தராம தீக்ஷிதர் முதலான யாகசிலர்கள் ஷை யாகத்தை நன்றாய் நடத்திவைத்தார்கள். ஷை நடேசதீக்ஷிதரும் அனந்தராம தீக்ஷிதரும் யக்ஞதத்வத்தை விளக்கி உபன்யஸித்தார்கள். குஜிலியா மடத்தில் ப்ராம்மணபோஜனம் நடந்தது.

3. ஆவணி 8,9,10,11 தேதிகளில் ஷை அனந்தராம தீக்ஷிதரவர்களால் குஜிலிமடம் பிரும்மசர்ய ஆச்ரமத்தில் ஷை அனந்தகிரி ஸ்வாமிகள் முன்னிலையில் வேததாத்பர்யம், பாகவத,பாரதஸாரம், கடைசிதினம் தர்மபுத்ரபட்டாபிஷேகம் பலரும் பாவசமாகும்படி காம்பீர்யமாய் ப்ரவசனம் செய்தார்கள்.

4. 11வ இரவு மேலவீதி இந்த்ருபட் வீட்டுவாசலில் எப்பொழுதும் புராணம் நடந்துவரும் எலக்ட்ரிக் பந்தலில்ஷை அனந்தராம தீக்ஷிதரவர்களால் 'ஸீதாகல்யாணம்' விசேஷதத்வ விளக்கத்துடன் நடத்தப்பட்டது.

5. 12, 13, 14வகளில் மேலவீதி நாகநாதபிள்ளையார் கோவில் வாசலில் ஸ்ரீமத்ராமாயணம் நடத்திவரும் திட்டச்சேரி பிரும்மஸ்ரீ ரகுநாத சாஸ்திரிகள் அவர்கள் ராமாயண வார கதாகாலக்ஷேபத்தொடரின் இடையில் ஸீதாகல்யாணம் பாதுகாபட்டாபிஷேகம் ஸுக்ரீவபட்டாபிஷேகம் பக்கவாத்தியத்துடன் பல தத்வார்த்தப் பிரகடனத்துடன் ஸப்யர்கள் களிக்கும்படி நடத்தி

வைத்தார்கள். ஷை பிரும்மசர்யாச்ரமத்தில் ஷை ராமாயணகால க்ஷேபத்தொடர் வாராவாரம் நடந்து முடிவுபெறும்.

குறிப்பு:— ஷை ப்ரும்மசர்ய ஆச்ரமத்தில் அப்போதைக்கப் போது நடைபெறும் காரியங்களுக்கு எப்பொழுதும் ஆச்ரமத்தில் ஷை ஸ்வாமிகளின் பக்கத்தில் இருந்துகொண்டு சரீரப்ரயாஸை யுடன் உழைத்துவரும் தஞ்சாவூரிலிருக்கும் Late வக்கீல் குமாஸ்தா நாடாகுடி கோபாலய்யர் அவர்களுடைய ஊக்கத் தையும் ச்ரத்தையையும்பற்றி மஹாஜனங்கள் எல்லாராலும் மிகவும் ச்லாகிக்கப்பட்டது.

நாற்றிசையினின்றும் நல்ல ப்ரும்மசாரிகள்
நாடிவந்து நல்வழிபெற நாம் பிரார்த்திக்கின்றோம்.

ஸாரம், ரங்காசாரியன், தஞ்சை ப்ரும்மசர்ய ஆச்ரமம்.

## ஓர் சந்தேகத்தின் ஞாபகம்.

பண்டித சிரேஷ்டர்காள்:—

நமது ஆர்யதர்மபத்திரிகை புஸ்தகம் 15 ஸஞ்சிகை 20 பக்கம் 224-ல் 'ஓர் சந்தேகம்' என்று மகுடமிட்டு என்னால் எழுதப் பட்டிருந்த விஷயத்தை பத்திரிகாபிமாள் அறிந்திருக்கக்கூடும் என்றே நம்புகின்றேன். ஆனால் நாளதுவரையில் (21—8—30) வரையில் யாதொரு பதிலும் ஷை சந்தேகத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. பத்திரிகைகளில் சந்தேகத்தைஎழுதுவதுபண்டிதர் களுடைய அபிப்பிராயத்தைத்தெரிந்துகொள்வதற்கும் லோகோ பகாரமாக இருப்பதையும் உத்தேசித்தேதான் எழுதப்படுகின் றது. சந்தேகம் எழுதினால் அதன்பிறகு ஒன்று இரண்டு வாரத் திற்குள் அதற்கு சமாதானம் எழுதப்பட்டால் பத்திரிகாபிமானி களுக்கும் திருப்தியாகஇருக்கும். ஏனெனில்—பத்திரிகைகளில் ஒரு சந்தேகம் எழுதப்பட்டால் அதற்கு சமாதானம். யாரால், எப்போது, எந்தவிதமாக, வரப்போகின்றதோ? என்பதையே பத் திரிகாபிமானிகள் மிக்க ஆவலாக எதிர்பார்ப்பது வழக்கம். ஆகை யால் அவர்களுடைய ஆவலைபூர்த்திசெய்யவேண்டியதன் பொரு ட்டு, பண்டிதமணிகள் இந்த ஆர்யதர்மத்தின் மூலமாக இனிமே லாவது ஷை சந்தேகத்திற்கு தக்க சமாதானம் எழுதமுன்வருவா ர்கள். என்கிற எண்ணத்தினால், ஞாபகப்படுத்த முன்வந்தேன்

சுபம் T. V. தர்மராஜசனடாடிகள்